# கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நீங்கள் பெறப்போகிற இழக்க போகிற பலன்கள் - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** கிறிஸ்தவர்களுக்கு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, "நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிச்சயமாக நிற்கவேண்டியிருக்கும்." ஆனால் இந்த நியாயதீர்ப்பிற்கான நோக்கம் என்ன? இயேசு நம்முடைய பாவத்திற்கான கிரையத்தை செலுத்தி விட்டாரா தேவன் அவைகளை நினைவு கூறுவது இல்லையா?

அப்படியானால், கிறிஸ்தவர்கள் ஏன் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நிற்கவேண்டும்? இந்த நியாயதீர்ப்பிற்கும் இரட்சிப்பிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா. இரட்சிப்பு என்பது ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுகொள்ளும்போது அவனுக்கு அளிக்கப்படுகிற இலவசமான ஈவாகும்.

ஆனா கிறிஸ்துவின் நியாசனம் என்பது அவர் நம்மை இரட்சித்ததற்கு பிறகு நாம் வாழும் முறையை சார்ந்து இருக்கிறது. கிறிஸ்துவுக்காக

நாம் செய்திட்ட அணைத்தும் அன்று பதிப்பிடபட்டு பலனளிக்கப்படுகிறது.

வேதம் சொல்கிறது, “ஏனென்னில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது ஏற்ற பலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்”.

நாம் அவருக்காக செய்த நற்க்கிரியைகளுக்காக கிறிஸ்துவிடம் இருந்து பலனை பெறுவோம் என்பது நமக்கு தெரியும், ஆனா இங்க வேதம் என்ன சொல்கிறது என்றால் நம்முடைய தீமைக்கும் பலன் பெருவோம் என்கிறதே? உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் பெருகிற பலன்களை உண்மையில்லாத கிறிஸ்தவர்கள் பெறமாட்டார்களோ?

ஆனா கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கண்ணீர் இருக்க வாய்ப்பிருக்கிறதா? அங்கு பலன்களை இழக்க நேரிடுமா, பதிப்பையும் கனத்தையும் பரலோகத்தில் நித்தியமாக நமது ஸ்தானத்தை இழக்க வாய்ப்பு இருக்கிறதா?

இந்த கேள்விகளுக்கு வேதாகமத்தில் இருந்து விடைகளை பெற்றுக்கொள்ள நமக்கு உதவியாக இன்றைக்கு Dr. எர்வின் லட்சர் நம்முடன் இருக்கிறார், மூடி திருச்சபையின் மூத்த போதகர் சிக்காகோ, இல்லினோசிஸ். நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்**: வணக்கம். நீங்கள் கிறிஸ்தவராக இருந்தால், நீங்களும் ஒருநாள் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும் என்று வேதம் சொல்வதை அறிந்திருக்கிறீர்களா?ஏன்? இந்த நியாயாத்தீர்ப்பின் நோக்கம் என்ன? உங்களுடைய எல்லா பாவங்களையும் கிறிஸ்து மன்னிகவில்லையா? எனது நண்பரும் விருந்தினருமான, Dr. எர்வின் லட்சர், சிக்காகோ மூடி திருச்சபையின் மூத்த போதகர், இல்லினோசிஸ். அவர்கிட்ட கேட்டேன், "ஏன் அநேக கிறிஸ்தவர்கள் இந்த நியாயாதீர்ப்பையும் அதனுடைய முக்கியத்துவத்தையும் தவறாக புரிந்துகொள்கிறார்கள்?"அவருடைய பதில் இதோ. நீங்களும் அதை கேட்க விரும்புகிறேன்.

**டாக்டர். எர்வின் லட்சர்:** ஜான், என்னுடைய ஊழியத்தில் நான் பார்த்து வியந்தது என்னன்னா அநேக ஜனங்கள் வேதம் போதிப்பதை உணராமல் இருக்கிறார்கள் அதாவது நாம எல்லாரும், கிறிஸ்தவர்களாக, "இயேசு கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நின்று இங்கு மாம்சத்தில் நாம செய்த கிரியைகளுக்கு கணக்கு கொடுக்கவேண்டும், நல்லதோ கேட்டதோ எதுவானாலும் சரி." நிறைய பேர் எங்கிட்ட சொல்றதையும் கேட்டிருக்கேன், ?சரி, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு இருப்பதால இந்த மாதிரியெல்லாம் இயேசு கிறிஸ்து நம்மை நியாயந்தீர்க்க வழியில்லை என்கிறார்கள்."ஆமா, நம்முடைய பாவங்கள் சட்டரீதியாக மன்னிக்கப்பட்டு இருக்கு தேவன் அதை ஒன்றையும் தனது மனதில்

வைப்பதில்லை. ஆனா அவருடைய பிள்ளையாக, நம்மை அவர் மதிப்பிடும் நாள் வரும். வேதம் சொல்கிறது 1 கொரிந்தியர் மூன்றாம் அதிகாரத்தில் நிச்சயமாக சில ஜனங்கள், நியாயத்தீர்ப்பின் போது - இது கிறிஸ்தவர்களை பற்றி சொல்கிறது - அவங்களும் பாதுகாக்கப்படுவாங்க “அக்கினிக்கு விளக்கபடுவாங்க.” இருந்தாலும், “நஷ்டமடைவார்கள் என்று சொல்கிறார்.”

அந்த நியாயத்தீர்ப்பு வெட்ட வெளிச்சமாக்கும் என்பதை மறக்க கூடாது, அதை பற்றி முந்தைய நிகழ்ச்சியில் பார்த்தோம். அந்த நியாயத்தீர்ப்பில் எல்லாமே வெட்ட வெளிச்சமாக வெளிப்படும். நாம எப்படிப்பட்ட மனுஷர் என்பதை அந்த நாள் வெளிப்படுத்தி சொல்லிடும். இன்றைக்கு நான் வாழ்கிற வாழ்க்கை முறைதான் ராஜ்யத்தில் எனது நிலையை நிர்ணயிக்கிறது என்று சொல்லுவேன் - நித்திய தாக்கத்தை உண்டாக்கும். அதுமட்டுமல்ல, பரலோகத்தில் எல்லாரும் சந்தோஷமாகத்தான் இருப்போம். எல்லாரும் தேவனை ஆராதித்திடுவோம். ஆனா சிலருக்கு மற்றவர்களை விட அதிகப்படியான பொறுப்புகள் அளிக்கப்படுவது உறுதி, அதை பற்றி நான் அடுத்த நிகழ்ச்சியில் பார்க்க போகிறோம், ஏன்னா அவர்களுக்கு உண்மைக்கு கிடைக்கும் பரிசு. சரி இன்றைக்கு நாம பேச போகிற காரியங்கள் ரொம்ப முக்கியமானது இதுதான் அச்திபாரமானது நீங்க கிறிஸ்துவுக்குள் விசுவாசியாக இல்லாதிருந்தால், நீங்கள் இந்த நியாயதீர்ப்பில் இடம்பெற மாட்டர்கள். நீங்க இன்னொரு

நியாயத்தீர்ப்பில் இடம் பெறுவீர்கள் அதை தான் வேதம் பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு என்று கூறுகிறது. அது தேவனை பற்றிய உங்களது வெளிப்பாட்டை சார்ந்த ஒன்றாகும். உங்களுக்கு கொடுக்க பட்டதை வைத்து நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதன் அடிப்படையில் நீங்கள் நியாயந்தீர்க்க படுவீர்கள். ஆனா எதிர்பாராதவிதமாக, அதினால் நித்திய ஆக்கினையை பெறுவீர்கள். ஒன்று நினைவிருக்கட்டும், இரண்டு விதமான நியாயத்தீர்ப்பு, இரண்டு விதமான மக்கள் கூட்டம், மேலும் இன்றைக்கு, ஜான், நாம கிறிஸ்தவர்களுக்கான இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்தை குறித்து பேச போகிறோம்.

**ஆன்கர்பெர்க்:** சரி, இந்த நிகழ்சிகள் மூலமாக, ஒரு கிறிஸ்தவராக நீங்க கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது பெற்றுக்கொள்ள போகிற பலன்களை குறித்து நாம பேசிக்கொண்டு இருக்கிறோம். அடுத்து நீங்க கேட்க போகிற காரியம்தான் உங்க பின்னணியா இருக்கணும், ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் நம்முடைய சின்ன சின்ன செயல்களுக்கு கூட நாம் பலனை அடைவோம் என்று தேவன் கிருபையாய் நமக்கு வாக்கு கொடுத்திருக்கிறார். இதுதான் ரொம்ப முக்கியம், அதனால இதை கவனமாக கேளுங்கள்.

**எர்வின் லட்சர்:** அதாவது, ஜான், இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கும்போது நாம் பெற்றுக்கொள்ள போகிற பலன் என்ற தலைப்பை

பற்றி பேசும்போது, என்னுடைய கற்பனையில் எல்லையை நான் தொடுகிறேன் என்று சொன்னா அது மிகையாகாது. இது என்னை மெய்சிலிர்க்க வைக்கிறது. இதை கேட்டுகொண்டு இருக்கும் கிறிஸ்தவர்களின் சிலர் இதை இதுவரைக்கும் கேட்டிருக்கவே மாட்டார்கள். சரி, இதை விவரித்து சொல்வதற்கும் நாம என்ன பேசுகிறோம் என்பதை புரிந்துகொள்வதற்கு ஏற்றவாறு, இதனுடைய பின்னணியை பற்றி கொஞ்சம் விளக்கமா சொல்றேன்.

நினைவிருக்கட்டும் ஆதாமும் ஏவாளும் சிருஷ்டிக்க பட்டபோது, வேதம் சொல்கிறது முதல் ஆதாம் உண்டாக்கபட்டான் பிறகு தேவன் அவனுக்கு ஒரு துணையை உண்டாக்கிட விரும்பினார். உங்களுகே, தெரியும், ஆதாமால விலங்குகளில் எந்தவிதமான துணையும்பொருத்தமாக இல்லை அதனால தேவன் ஏவாளை உருவாக்கினார். அவர்களை அவர் ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் அதனால் ஏவாளை உருவாக்கினார் ஆதாமும் ஏவாளும் ஒருவரானார்கள் - இருவரும் ஒரே மாம்சமானார்கள்.

இங்க, அதாவது, உண்மையை சொன்னா, பாவம் இந்த நேரத்தில் உட்பிரவேசிப்பதை பார்க்க முடியும், ஆனா இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு  பவுல் சொன்னது போல இரண்டாம் ஆதாமாக வந்தார். அவர் வந்ததன் நோக்கம் என்னன்னு கேட்டா, முதல் ஆதாமால நடந்த குழப்பங்களை மாற்றி அமைக்கும்படியாக இவர் வந்தார். இயேசு கிறிஸ்து இங்க வந்து மரித்த போது, நித்தியகாலமாக தேவன்

வாக்குத்தத்தம் செய்த கிறிஸ்து என்னும் ஈவினால் மனுக்குலம் மீட்பை படிந்தது. அதனாலதான் நம்மை சபையை கிறிஸ்துவின் மணவாட்டி என்று சொல்கிறோம். கிறிஸ்துவின் மணவாட்டியின் நோக்கம் என்னவென்றால், கிறிஸ்துவின் மணவாட்டியின் முக்கிய நோக்கம் என்னன்னா, அவளும் கிறிஸ்துவுடனே சிங்காசனத்தில் அமர்ந்து இந்த பிரபஞ்சத்தை ஆளுகை செய்ய வேண்டும் என்பதே.

அதாவது, ஜான், வெளிப்படுத்தல் புத்தகத்தில் ஒரு வசனம் இருக்கு, நிறைய வசனங்கள் என்று சொல்லலாம், இவை நம்முடைய கற்பனையின் எல்லையை அதிகரித்திடும் என்று சொல்வேன். அங்க என்ன சொல்லப்பட்டிருக்கு தெரியுமா. “நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்.” இது வெளிப்படுத்தல் 3:21. இந்த பகுதியில் சொல்லப்பட்டது நமக்கு புரியுதா? நாம ஜெயங்கொள்ளுகிறவராக இருந்தால், நாமும் இயேசு கிறிஸ்துவின் சிங்காசனத்தில் அவர் எப்படி பிதாவின் சிங்காசனத்தில் அவரோடு கூட உட்கார்ந்திருக்கிராரோ அதுபோல நாமும் இஎசுவோடுகூட உட்கார்ந்திடுவோமா? ஜான், இதுக்கு என்ன அர்த்தம் நாமளும் இந்த பிரபஞ்சத்தின் சிங்காசனத்தில் உட்காரபோகிறோம், தேவனுடைய சிங்காசனத்தில் அமர்ந்திடுவோம்.

இப்ப, இதுக்கு நவ யுகத்தின் போதனைகளுக்கு எந்த சம்பந்தமும் கிடையாது மனிதனுடைய தெய்வீக தன்மை அலது மனிதனுடைய ஆற்றலின் முதிர்ந்த நிலை என்பதற்கும் சம்பந்தமே இல்லை. இல்ல! இதெல்லாம் தேவன் நம்மை பாவ சேற்றிலிருந்து தம்முடைய கிருபையினால் தூக்கி எடுத்து நம்மை சுத்திகரித்து, நம்மை தேவனுடைய சுதந்திரர்களாகவும் இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரராகவும் ஏற்படுத்தி, நம்மை கிறிஸ்துவின் மணவாட்டியாக நிறுத்தி அவரோடு அமரும் ஸ்லாக்கியத்தை கொடுத்திருக்கிறார் அதனால அவருடைய நீதிக்கு ஒப்பான நீதியை அடைகிறோம். சரி, நாம ஒருபோதும் கிறிஸ்துவுக்கு நிகராக வர முடியாது நம்முடைய நிலை அது ஏன்னா நாம சிருஷ்டிகள் அவரே நம்முடைய சிருஷ்டிகர். ஆனா நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் நாமலும் இயேசு கிறிஸ்துவுடன் சேர்ந்து ஆளுகை செய்திட போகிறோம். "ஜெயம் கொள்கிறவனுக்கு சகலத்தை ஆண்டுகொள்ளும் அதிகாரத்தை கொடுத்திடுவேன் என்று, வேறொரு பகுதியில் சொல்லியிருக்கிறார்.

அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா. அதாவது குடும்பத்தின் பாரம்பரியத்தினால் நமக்கு இந்த சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. அதாவது, தூதர்களுக்கு இந்த ஸ்லாக்கியம் கிடையாது. உண்மையில், வேதம் சொல்கிறது, "நாம, தூதர்களை நியாயந்தீர்த்திடுவோமாம்." அவர்கள் நியாயந்தீர்க்க படவேண்டும் என்ற அர்த்தத்தில் அல்ல ஆனா நாமதா அவங்களையும் ஆளுகை செய்திடுவோம். எதனால

தூதர்களுக்கு இந்த ஸ்லாக்கியம் கிடைக்கல? அதற்கு காரணம் தூதர்கள் இயேசுவினுடைய சகோதரர்கள் அல்ல. தேவன் அவர்களுடைய பிதாவும் அல்ல. அவர்களுக்கு அத்தை மாமா உறவினர்கள் தாத்தா பாட்டி சொந்தம் என்று யாருமில்லை, புரியுதா? இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு நம்மில் ஒருவராக நமது சகோதரராக வந்தபடியினால் தான், வேதத்தின் சில பகுதியில் சொல்லப்படுவது போல, இந்த பிரபஞ்சத்தின் சரித்திரம் வாசிக்கப்படும்போது - நாம் அவருடைய சகோதரர்களாக இருக்கிறபடியால், தேவன் நமக்கு பிதாவானபடியால், தேவனுடைய சுதந்திரரும், இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்திரருமாக இருக்கிறோம் - நம்முடைய சுதந்திரத்தை பற்றி கேட்பதற்கு நாம அங்க இருக்கணும். அவரோடு கூட இருக்கப்போகிற அந்த ஸ்லாக்கியத்தை எண்ணி நாம ஆனந்தமடைகிறவர்களாக இருக்க வேண்டும். சரி, வேத வசனங்கள் தெளிவாக கூறுகிறது, அதாவது, இறுதியில் சிருஷ்டிகளாகிய நாம் நம்மை சிருஷ்டித்தவரை போல அதாவது கிறிஸ்துவை போல ஆகி கிறிஸ்துவுடனேகூட சேர்ந்து இந்த முழு பிரபஞ்சத்தையும் ஆளுகை செய்யும் பாக்கியம் பெற்றிடுவோம். இதைதான் நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நின்று பெற்றுக்கொள்ள வேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** சரி, வேதம் சபையை கிறிஸ்துவின் மணவாட்டி என்று சொல்கிறதை நாம் அறிந்திருக்கிறோம் என்று நினைக்கிறேன். நாம பரலோகம் போகும்போது, அங்க கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுடனே

நித்தியமாக இருக்கும்படியான ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து என்ற நிகழ்வு இருப்பதை வாசிக்கிறோம். எல்லாரும் கல்யாண கோலத்தில் இருப்பாங்க, இல்லையா? மணவாட்டி என்ன உடை அணிந்திருக்கிறாள் என்பது ரொம்ப முக்கியம்.
கிறிஸ்தவர்களாக, சபையின் பங்காக இருப்பவர்கள், கிறிஸ்துவின் மணவாட்டியாக அங்கு நிற்கவேண்டும், அப்ப என்னமாதிரி உடை அணியப்போகிறோம்? அந்த உடைகள் எங்கிருந்து பெறப்படுகிறது? இந்த கேள்விக்கு வேதாகமம் சுவாரசயமான ஒரு பதிலை தருகிறது. கவனிங்க:

**எர்வின் லட்சர்:** வேதமானது ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து இருக்குமென்று சொல்கிறது. இது எடுத்துகொள்ளப்படுதலுக்கு பிறகு நடக்கும் என்று நான் நம்புகிறேன் நாம இயேசு கிறிஸ்துவோடு பரலோகத்தில் இருப்போம் சபையை சார்ந்து எல்லா விசுவாசிகளும் அங்கு இருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆனா அநேகர் இந்த பகுதியை துரிதமா வாசித்துட்டு போயிடுவாங்க- இதை வெளிபடுத்தல் பத்தொன்பதாம் அதிகாரத்தில் பார்க்கிறோம் - இந்த மணவாட்டியின் உடையை பற்றி அவர்களுக்கு கவலையில்லை. இதை கவனியுங்க.

நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்ல கேட்டேன், சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய

வசிதிரம் தரித்துகொல்லும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.” நிறைய பேர் இதை வாசிக்கும்போது என்ன நினைக்கிறார்கள் என்றால், “அந்த, மெல்லிய வஸ்திரம் இயேசு கிறிஸ்துவினுடைய நீதி என்கிறார்கள்.” ஆனா அந்த பகுதியில் அப்படி சொல்லப்படவில்லையே.

இதை குறித்த ஒரு தெளிவை பெற்றுகொள்ளலாம். ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணத்தில் பங்கு பெற உங்களுக்கு இரண்டு விதமான உடைகள் இருக்கணும். முதலாவது, இயேசு கிறிஸ்துவின் நீதியை உடையவர்களாக இருக்கவேண்டும். ஒருநாள் என்னுடைய ஒரு நண்பருக்கு நான் சுவிசேஷத்தை பகிர்ந்துகொண்டிருந்தப்ப அவன் எங்கிட்ட கேட்டான், “நா எதுக்காக இயேசுவை விசுவாசிக்க வேண்டும்?” இதுக்கு, சரியான பத்தி, “நீ தேவனை போல பூரனமாகாவிட்டால் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது.” நம்மில் யாருமே தேவனை போல பூரணமானவர்கள் அல்ல. அதனால இயேசு கிறிஸ்துவை நாம் விசுவாசிக்கிறோம். நாம் அவருடைய நீதியை பெற்றுகொள்கிறோம் இதைதான் ஒரு கீர்த்தனை சொல்கிறது, “அவருடைய நீதியை தரித்துகொண்டவர்களாக, சிங்காசனத்திற்கு முன்பு குற்றமற்றவர்களாக நிற்ப்போம்.” நாம அங்க போனதுக்கு பிறகு, நாம பரிசுத்த வாங்கலின் நீதியின் கிரியைகளால் உடுத்துவிக்கப்படுவோம். ஜான், ஒவ்வொரு நாளும் நாம் செய்கிற காரியங்கள், அதன் மூலம் ஆட்டுகுட்டியானவரின் கல்யாணத்தில்

உடுத்திகொள்ளும்படியான ஒரு உடையை நாம உண்டாக்கி கொள்கிறவர்களாக காணப்படுகிறோம். அதாவது, இரட்சிப்பிற்கு முன்பு நம்முடைய கிரியைகள் எதுவும் தேவனுடைய பார்வையில் ஒன்றுமில்லை, ஆனா இரட்சிப்பிற்கு பிறகு, அவை ஒவ்வொன்றும், தேவனுக்கு விலையேறபெற்றவை. அவை மிகவும் விலையேற பெற்றதாக இருப்பதால், அந்த நிகழ்விற்கு ஆயத்தப்பட ஒவ்வொருநாளும் நமக்கு கிடைத்த ஸ்லாக்கியம்தான் . இத புரிஞ்சுக்க கொஞ்சம் கஷ்டமாதான் இருக்கும் நான் இன்னைக்கு வாழ்கிற முறைதான் ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணத்தில் நான் அணியும் உடையை நிர்ணயிக்கிறது, அதாவது, “பரிசுத்தவான்களின் நீதிகளாக இருக்கிறது.”

**ஆன்கர்பெர்க்:** சரி இன்னொரு மிக முக்கியமான கேள்வி: கிறிஸ்துவின் நியாயாசனத்தில் எல்லாரும் ஏதாவது ஒரு பலனை அடைவது சாத்தியமாகுமா? மகிழ்ச்சியான , பதில் என்னன்னா, முடியும்” இதை கவனிங்க.

**எர்வின் லட்சர்:** உண்மையான விஷயம் என்னன்னா நாம செய்கிற எல்லா காரியங்களும் இயேசுவால மதிப்பிடபடுது அதுவே நமது மதிப்பீடாகிறது. ஆனா உங்களை உற்ச்சாக படுத்தும்படி சொல்கிறேன் இயேசு சொல்லியிருக்கிறார், “என்னுடைய நாமத்தின் நிமித்தம் இந்த சிறியருக்கு ஒரு கலசம் தன்நீர்கொடுத்தாலும் அதற்கு பலன் இல்லாமல் போகாது.”எனக்கு நல்லா நியாபகமிருக்கு ஒருநாள்

என்னோட நண்பனுக்கு ஒரு பொருளை கொடுக்க அவன் வீட்டுக்கு போய் கதை தட்டீட்டு இருந்தேன் அப்ப ஒரு பெண் வந்து கதவ திறந்தாங்க முகத்துல கண்ணீரின் அடையாளம் இருந்தது, “என்னை மன்னிச்சிடுங்க,என்று சொன்னபடி, என்னோட ஜெப நேரத்துல நீங்க வந்திருக்கீங்க, என்று சொன்னார்கள், ஒவ்வொரு காலையும் என் குடும்பத்திற்காக ஜெபிப்பது என் பழக்கம் என்றார்கள்.” சரி, ஜான், இது நீதியான செய்கைக்கு ஒரு உதாரணமாக இருக்கிறது. சிலர் செய்வதை, மற்றவர்கள் அறிந்துகொள்ளாமல் இருக்கலாம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்திடலாம் ஒரு ஊழியன் தன் எஜமானுக்கு செய்ய கூடிய அனைத்தையும் செய்திட வாய்ப்பிருக்கிறது. இது எல்லாமே நாம இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்ப்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிற காரியங்களாக இருக்கிறது என்று சொல்வேன் இதற்கு மேலாக அவரை ஒன்றையும் கேட்பது இல. உங்களை உற்சாகபடுத்தும்படி சிலவற்றை சொல்கிறேன். வேதம் சொல்கிறது, “ஒவ்வொரு மனிதனும் தேவனால் புகழப்படுவான்.,” ஜான், தேவன் பூலோக இணையதளத்தை ஆராய்ந்து பார்ப்பார் என்று நினைக்கிறேன் அதிலிருந்து நம்மை பாராட்டும்படி நமக்கு பலன் கொடுக்கும்படியான ஒரு விஷயத்தை நம்முடைய வாழ்வில் இருந்து தேடி கண்டு பிடிப்பார் என்று நான் நம்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** இதுவரைக்கும் கிறிஸ்துவின் நியாயாசனத்தில் கிறிஸ்தவர்கள் பெற்றுக்கொள்ள கூடிய பலன்களை பற்றி பார்த்தோம்.

சரி  கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு கிறிஸ்தவர்கள் தங்கள் பலனை நித்தியத்தை நிர்ணயிக்கும் அந்த பலனை இழக்க வாய்ப்புகள் இருக்கிறதா? இதை பற்றியும் நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**எர்வின் லட்சர்:** ஜான், நாம உண்மையிள்ளவர்கலாக இருந்தால் பெற்றுக்கொள்ள போகிற மகிமை எப்படி இருக்குனு பார்த்தோம் - கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் அதிகாரம் கிடைக்கும். ஜெயம்கொள்ளுகிரவர்களாக இருக்கணும், யதார்த்தமான உண்மையை சொல்லட்டுமா நாம எல்லாரும் ஜெயம் கொண்டவர்கலாக இருக்க விரும்புகிறோம் ஆனால் எதையும் மேற்கொள்ள நாம முன்வருவது இல்லை. தேவன் நமக்கு உபத்திரவம் சோதனை என்று இவற்றை அனுமதிப்பதற்கு காரணம் என்னவென்றால் இயேசு கிறிஸ்துவோடு சேர்ந்து நாமும் ஆளுகை செய்கிறவர்களாக மாற ஜெயம்கொள்கிறவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான். நாம் பெறக்கூடிய மகிமைகளை பற்றி நாம் பார்த்தது போல இதை பெற முடியும், இதை பேசிடுங்கள், எதை பெற்றுக்கொள்ள முடியும், அதுமட்டுமல்ல நாம் எதை இழக்க நேரிடும் என்றும் வேதம் எச்சரிக்கிறது.

பவுலின் வார்த்தைகளை கவனமாக பாருங்க. “ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, வைளையேரபெற்ற கல், மரம், புல், வைக்கோல், ஆகிய இவைகளைக் கட்டினால் அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாளானது அதை

விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாகு எத்தன்மையிள்ளதேன்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியை பெற்றுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால் அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியில் அகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்."

ஜான், ஒரு கற்பனை காட்சி ஒரு மனுஷன் இருக்கான் அவன் எரிந்துகொண்டிருக்கும் வீட்டிலிருந்து தப்பித்து வெளியில வர்றா அவர் தப்பிச்சுட்டான் ஆனா வீட்டிலிருந்த அனைத்தும் எரிந்துவிட்டது. இயேசு என்ன சொல்றாருன்னா - இங்க அவர் அப்போஸ்தலனாகிய பவுல் மூலம் சபை தலைவர்களுக்கு சொல்லுகிறார் ஆனா இது நமக்கு பொருந்தும் - நம்முடைய வாழ்க்கையை மரம், வைக்கோல், புல் மீது கட்ட சாத்தியம் இருக்கிறது.

சரி, இப்ப இந்த இரண்டு பொருட்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை குறித்து யோசித்து பாருங்க. உங்களுடைய கரங்களில் தங்கமும், வெள்ளியும் விலையேற பெற்ற கற்களும் இருக்கலாம் இது எல்லாமே உண்மையில் மரம் வைக்கோல் புல்லை விட அதிக விலையே பெற்ற ஒன்றாக இருக்கிறது என்பது உண்மை. அப்ப நாம செய்கிற காரியத்தின் அளவை விட தரம் தான் ரொம்ப முக்கியம். அது கிறிஸ்துவுக்காக செய்யப்படுகிறதா? அவரை நாம் பிரியபடுத்த

வேண்டும் என்பதற்காக செய்யப்படுகிறதா அல்லது நம்முடைய தாலந்துகளை வெளிபடுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக செய்யபடுகிறதா? இதை இங்கு கலந்து ஆலோசிப்பது மிக முக்கியமான காரியமாக இருக்கிறது. இன்னொரு காரியத்தையும் நீங்க புரிந்துகொள்ள வேண்டும் இந்த பொருட்களுக்கு இருக்கிற வித்தியாசத்தை சிலவேளைகளில் சாதாரண கண்களால் புரிந்துகொள்ள முடியாது.

ஜான், இயேசு கிறிஸ்து இந்த காரியங்களை குறித்து பேசுவதை போல யோசிக்க விரும்புகிறேன் நம்முடைய கிரியைகளை எப்படி பார்க்கிறார் - அதை குறித்து தான் நாமளும் பேசீட்டு இருக்கோம் - இதை அக்கினியால் சோதித்து பார்க்கும்போது எல்லாருடைய கலவையும் அங்க வெட்ட வெளிச்சமாக தெரியும். இதுல கேள்வி என்னன்னா, அந்த அக்கினியானது எல்லாத்தையும் எரித்த பிறகு, மீதியாக இருக்கபோறது என்னது? ஒரு காரியத்தை புரிந்துகொள்வோம் இந்த வாழ்க்கையில் எல்லா நேரத்திலும் குப்பையையும் விலையேற பெற்ற சிவப்பு ரத்தினத்தையும் வேறுபிரிக்க முடியாம போகும். ஆனா தேவனாலும் அக்கிநியாலும் அது முடியும். அதுமட்டுமல்ல, ஒருவேளை இந்த காரியங்கள் எல்லாம் நம்முடைய கிரியைகளை வெட்ட வெளிச்சமாக்கிடலாம் அதினால் நாம நம்முடைய பாவங்களை நேரடியாக பார்ப்பதற்கு முன்பே  இயேசு  கிறிஸ்து நம்மை மதிப்பீடு செய்திட வாய்ப்பு இருக்கிறது. ஆனா நீங்களும் நானும் இன்றைக்கு

செய்கிற காரியங்கள் அனைத்தையும் பொன் வெள்ளி விலையேறபெற்ற கல்லை வைத்தோ மரம் புல் வைக்கோலை வைத்தோதான் செய்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** மத்தேயு 25ல இயேசு சொன்ன உவமை உங்களுக்கு நியாபகம் இருக்குதா ஒரு எஜமான் தன் ஊழியர்களுக்கு பலவிதமான தாலந்துகளை கொடுப்பானே? சிலர் உண்மையாய் தாலந்துகளை பயன்படுத்தினார்கள், சிலர் உண்மையாய் இல்லை. அதனால, இந்த உவமையானது எப்படி கிறிஸ்துவின் நியாயாசனத்தில் கிறிஸ்தவர்களில் சில பலனை பெறுவார்கள் சிலர் பலன் பெறாமல் போர்வார்கள் என்பது விளக்குகிறது. கவனிங்க:

**எர்வின் லட்சர்:** என்னை பொறுத்தவரை நாம எல்லாரும் செய்ய விரும்புகிற ஒன்று இழப்பை சந்தித்த ஒரு உதாரணத்தை பார்க்க விரும்புவோம் ஏன்னா தனிப்பட்ட விதத்தில் கண்ணார ஒன்றை பார்த்தால் அது அதிக தாக்கத்தை உண்டாக்கிடும். இயேசு கிறிஸ்துவினுடைய உவமையை நாம கூர்ந்து கவனிக்கணும், உதாரணமாக, மத்தேயு 25ல் பலதரப்பட்ட தாலந்துகளை பெற்றுக்கொண்ட மனிதர்களை பற்றி அங்கு சொல்லப்பட்டு இருக்கிறது உங்களுக்கு அந்த சம்பவம் தெரியும். இதுல ஒரு மனிதன் உண்மையில்லாமல் இருக்கிறான். அவன் தனது தாலந்தை ஒளித்து வைத்தான் ஏன்னா, “என்னால பத்து தாளத்துகள் பெற முடியாம போயிட்டா, ஒரு தாலந்து உள்ளவனாக நிற்கவும் மாட்டேன் என்றான்.”

அவனுக்கு சரியான மனப்பான்மை இல்லை அதனால தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்து பிறகு கொண்டு வந்தான். அப்போது எஜமான், சொன்னது நினைவிருக்கா, அந்த ஊழியனிடத்தில் அவன் கோபமடைந்தான், அதனால எதை இழந்தான்? சரி, முதலாவதாக, தன் எஜமானுடைய அங்கீகாரத்தை இழக்கிறான். உண்மையில், எஜமான் சொல்றாரு, "துன்மார்க்கனும், சோம்பலும் உடைய ஊழியனே! ஒருவேளை, சரி, பாஸ்டர் லட்சர், கிறிஸ்தவர்களை பார்த்து இயேசு அப்படி எல்லாம் சொல்ல வாய்ப்பிருக்கான்னு, கேட்கலாம்! நிச்சயம், வாய்ப்பிருக்கு. உண்மைதான். அதாவது, எல்லாரும் இந்த பாராட்டை பெற முடியாதே. "நல்லது, உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரனே."

இரண்டாவதாக, அவன் தற்காலிகமான புறக்கணிப்பை எதிர்கொள்கிறான். இயேசு சொன்னார், "அவனிடத்தில் உள்ள தாலந்தை வாங்கி மற்றவனுக்கு கொடுங்கள்." சரி, கவனிங்க, இந்த உவமையை விளக்கிடும் பல நிலைகள் இருக்கிறது. சிலர் இந்த உண்மையில்லாத ஊழியன் கிறிஸ்தவன் அல்ல என்பார்கள், அப்படி வியாக்கியானம் செய்பவர்களை நான் பாராட்டுகிறேன், ஆனா இங்க ஒரு முக்கியமான காரியத்தை நாம கற்றுகொள்ளனுன்னு நினைக்கிறேன். அப்பத்தா மனிதன் ஒழுக்கத்தை காத்திடுவான். அவன் இன்னமும் ஊழியன்தான், ஆனா முக்கியமான ஒன்றை அவன் இழந்துவிடுகிறான். அவனுக்கு சகல பட்டணத்தின் மேலும் அதிகாரம் அளிக்கப்படவில்லை. இங்க

உண்மையாக சொல்லப்பட இருந்த காரியம் நீ, அதிகாரத்தை பெற்றுகொள்ள நான் ஆசைப்பட்டேன் என்பதல்ல, இல்ல. எஜமானை பிரியப்படுத்தவேண்டும். இதைதான் கருத்தில் கொள்ளவேண்டும். இயேசு கிறிஸ்துவின் நியாயாசனம்.

இன்றைக்கு ஒன்றை நாம புரிந்துகொள்ளணும் யோவான் சொல்கிறான், “அவருடைய வருகையின் போது நாம் வெட்கப்பட்டு போகாதபடிக்கு ஜீவனம் பண்ணுவோமா.” இதை நாம் நினைவில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அதாவது, ஜான், இயேசு கிறிஸ்துவின் நியாயாசனமானது அவ்வளவு முக்கியமானது அல்ல என்ற எண்ணம் மக்களுக்குள் இருக்கிறது எதனால அப்படி யோசிக்கிறாங்கன்றத நாம பார்த்தோம். இது ஒருவருக்கு கொடுக்கப்படவேண்டிய முக்கியமான உத்வேகமாகதான் நான் பார்க்கிறேன். உண்மையில், ஒன்று மட்டும் சொல்லுவான் இயேசுவுக்கு முன்பாக நிர்ப்பது, அவரை நேருக்கு நேர் பார்ப்பது, நாம் வாழ்ந்த வாழ்க்கை முறைக்கு கணக்கு கொடுப்பது, இதெல்லாம் நம்மை உத்தமத்திற்கும் பரிசுத்தத்திற்கும் நேராக நடத்தாவிட்டால், வேறு எதுவுமே ஒன்றுக்கும் உதவாதுன்னு சொல்லுவேன்.

**ஆன்கர்பெர்க்:** இன்றைக்கு நாம் பார்த்த காரியங்கள் என்னவென்றால் கிறிஸ்துவின் நியாயாசனத்தில் கிறிஸ்தவர்கள் தங்கள் பலனை பரவும் இழக்கவும் வாய்ப்பிருக்கிறதா என்பதே. உங்களுடைய இரட்சிப்பை நீங்கள் இழக்க முடியாது, ஆனா

நித்தியமாக பரலோகத்தில் உங்களுடைய நிலையை நிர்ணயிக்கும் பலனை நீங்கள் ஒருவேளை இழப்பது சாத்தியமாகும். DR. லட்சர் கிறிஸ்தவர்களாக நீங்களும் நானும் உண்மையில்லாமல் வாழும்போது இழக்க நேரிடும் பலன்களை பற்றி கூறுகிறார். கவனியுங்கள்:

**எர்வின் லட்சர்:** சரி, இது எல்லாத்தையும் ஒரே கூரைக்குள் கொண்டு வரலாம். நீங்களும் நானும் எதை இழக்க முடியும்? இது ரொம்ப முக்கியம், நம்முடைய எஜமானுடைய அங்கீகரிப்பை இழக்க முடியும்.  சில கிறிஸ்தவர்கள் நல்லது என்ற வார்த்தையை கேட்க்காமல் கூட போகலாம். அதுமட்டுமல்ல, கிறிஸ்துவோடு சேர்ந்து ஆளுகை செய்ய முடியாமல் போகலாம் ஏன்னா ஆளுகை செய்வீர்கள் என்ற வாக்குத்தத்தத்தில், ராஜ்யத்தை ஆளுவீர்கள் என்பதில், நிபந்தனைகள் இருக்கிறது: “என்னோடு கூட பாடுபட்டால் என்னோடு கூட ஆளுகையும் செய்வீர்கள்.” நீங்கள் ஜெயம் பெற்றால், என்னோடு கூட என் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் படி செய்திடுவேன்.”

மூன்றாவதாக,  நீங்க மிகப்பெரிய சந்தர்ப்பத்தை பெற்றிடவும் இழக்கவும் வாய்ப்பிருக்கிறது. வெளிப்படுத்தல் விசேஷத்தை வாசித்து பாருங்க திரும்ப திரும்ப சொல்லப்பட்டிருக்கும் காரியம், “ஜெயங்க்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு அருளப்படும்...” ஆசீர்வாதங்கள் அங்கு குவிந்து இருக்கிறது. இது எஜமானோடு இருக்கும் உறவை குறித்து கூறுகிறது: “உன் பெயர் பொறிக்கப்பட்ட கல்லை உனக்கு தருவேன். மறைவான மன்னாவை கொடுப்பேன்.”

இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் இய்சு கிறிஸ்துவோடு நமக்கு இருக்கும் ஐக்கியத்தின் அடிப்படையில் கொடுக்கப்படும் ஸ்லாக்கியங்கள். இதை இழக்கவும் வாய்ப்பிருக்கிறது அதனால் உங்களை உற்சாகப்படுத்துகிறேன், இன்றைக்கே துவங்குங்க, முழு இருதயத்தோடு இயேசுவுக்காக வாழாமல் இருந்தால், இன்றே துவங்குங்க|! ஏனென்றால் நாம் கணக்கு கொடுக்க வேண்டி இருக்கிறது.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.